RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2529

OPEN ACCESS

# சங்க இலக்கியங்களில் முருகன்

பா. சீனிவாசன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தட்சசீலா பல்கலைக் கழகம், ஓங்கூர், திண்டிவனம்- 604305.

# Murugan in Sangam literature

**B. Srinivasan**[a, *]

[a] Department of Tamil, Department of Tamil, Takshashila University, Ongur, Tindivanam - 604305

* Corresponding Author: seenivasan@gmail.com

Received: 22-01-2025
Revised: 29-03-2025
Accepted: 06-04-2025
Published: 15-04-2025

Check for updates

**ABSTRACT**

The Sangam literatures were devotional literatures like the Thirumurai. However, the people of the Sangam period were dominated by theism. The worship of the Lord by various names can be known through Sangam literary texts. However, the Tamil people have worshiped Lord Muruga from ancient times. The messages about Lord Muruga are found in abundance in Paripadal, Thirumurukatrupadai and other Sanga texts. This study is designed to explore and understand these.

**Keywords:** Sangam, Paripadal, Thirumurukatrupadai

## முன்னுரை

பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் சங்க நூல்கள். இச்சங்கப் பாக்களைத் தொகுத்தார் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற பிரிப்பை அமைத்தனர். பத்துப்பாட்டில் இடம்பெறும் பாடல்கள் நூல்களின் தொகுப்பாக அமையும். எட்டுத்தொகைப் பாடல்கள் தனிநூலாக இல்லாது உதிரிப்பாடல்களின் தொகுப்பாக அமையும்.அகமும், புறமுமாய் அமைகின்ற நூல்கள் இவை. இந்த எட்டு நூல்களில் முருகனைப் பற்றிய செய்திகள் பலவகைகளில் இடம்பெற்றுள்ளன. சங்ககாலம் முதலே முருகன் பற்றிய செய்திகள் இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன. தமிழில் கிடைத்த முதல் இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியம் முருகனைச் “சேயோன்” என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளது. இதனை முருகனைப் பற்றிய முதற்பதிவாகக் கொள்ளலாம். சங்கப் பாக்களில் முருகப்பெருமானின் பிறப்புமுறை, தோற்றப்பொலிவு, பெயரீடுகள், ஊர்திகள், கொடிகள், ஆயுதங்கள் போன்றவை இலக்கியங்களில் எடுத்தாளப்பெற்றுள்ளன அவற்றை உட்தலைப்பிட்டுப் பகுத்துப் பார்த்தல் பயன்தரும். அதனையே இக்கட்டுரை ஆய்கின்றது

## பிறப்பு

சங்க இலக்கியங்களில் முருகனின் பிறப்பு குறித்த செய்திகள் சிலவே உள. சிவபெருமான் திரிபுரத்தை அழலால் எரித்தபின்பு உமையுடன் நீண்ட புணர்வு கொண்டான்.இதனை அறிந்து இந்திரன் அச்சம் அடைந்து இப்புணர்ச்சியினால் உண்டான கருவினை அழிக்க வேண்டினான். அதன் படி அக்கருவை இறைவன் சிதைக்க அவரது விந்து வெளியில் ஆறு பொறிகளாக விழுந்தது.அதனை தெய்வ முனிவர்கள் எழுவரும் ஞானத்தால் இந்திரனுக்கு ஊறு வாராதெனக்

உறுதி கூறி அவனிடமிருந்து அச்சிதைந்த கருவை ஏற்றுச் சென்று அதனை அம்மாதவர் வேள்வியின் கண் இட்ட பின்னர் அதனை அருந்ததி நீங்கலாக கார்த்திகை மகளிர் அறுவர்க்கும் வழங்கினர்.இவ்வறுவரும் அதனை உண்டு சூழுற்றுப் பின் இமயமலையிலுள்ள சரவணப் பொய்கையில் தாமரைப் பூவாகிய பாயலில் குழந்தையை ஈன்றனர். அப்பொழுதே இந்திரன் இகல்கொண்டு முனிவர்களுக்குத் தான் கொடுத்த வரத்தை மீறி வச்சிரப்படையால் குழந்தையினை வெட்ட ஆறு துண்டமாகச் சிதைந்து ஆறு துண்டமும் ஆறு குழந்தைகளாகிப் பின் ஒன்றாயின. அவ்வாறு ஒன்றான ஆறு முகமுடைய வடிவமே முருகன் என அவனின் பிறப்பு குறித்து பரிபாடல், திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, என சங்க இலக்கிய நூல்கள் கூறுவதனை

“பாக முண்ட பைங்கண் பார்ப்பான்

நிவந்தோங் கிமயத்து நீலப்பைஞ் சுனைப்

பயந்தோ ரென்ப பதுமத்துப் பாயல்

பெரும் பெயர் முருக!” - (பரி-5:27-54)

“முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்திக்

வருள் ஒருவன் அங்கை ஏற்ப

அறுவர் பயந்த ஆறமர் செல்வ! “(முருகு-6:270)

இப்பாடல் வரிகளைக் கொண்டு அறியலாம்.

## பெயர்க்காரணம்

முருகன் என்ற பெயர்க்கு வேர்ச் சொல் முருகு என்பதாகும்.இவ்வேர்ச் சொல்லிருந்தே முருகிய என்ற வேர்ச் சொல் தோன்றிற்று. இவற்றில் முருகு என்ற சொல்லிற்கு அழகு, இளமை என்று பொருள். ஆகவே முருகன் என்றால் அழகன் என்பது பொருளாகும்.மெல்லின, இடையின, வல்லின மெய் எழுத்துக்களுடன் உ எனும் உயிரெழுத்து ஒவ்வொன்றுடனும் சேர்ந்து முருகு (ம்+உ, ர்+உ, க்+உ - மு ரு கு) என்றதால் முருகன் எனப் பெயர் பெற்றதாகக் கருதலாம்.

இம்மூன்றும் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி இவைகளைக் குறிக்கும். முருகு, முருகன் என்ற பெயர்கள் சங்க இலக்கியங்களிலும் பயின்று வந்துள்ளமையை

“அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக” (முருகு-6:270)

“முருகன் அன்ன சீற்றத்துக் கடுந் திறல்” (அகநானூறு: மணி-158-16)

“பெரும் பெயர் முருக! நிற் பயந்த ஞான்றே”(பரி-5:50)

“முருகுஒத் தீயே, முன்னியது முடித்தலின்”(புறம்-56:15)

“முருகு என மொழியும் வேலன் மற்று அவன்”(ஐங்குறு-249)

இச்சில பாடல் வரிகளைக் கொண்டு அறியலாம்.

## வேறு பெயர்கள்

சங்க இலக்கியங்களில் முருகனைக் குறித்து வழங்கும் பெயர்கள் மிகுதி. இப்பெயர்கள் அனைத்தும் அவை வழங்கப்படும் சூழல்களின் அடிப்படையில் வெவ்வேறாக அமைந்துள்ளன. முருகனுக்குரிய பெயர்களாகச் சேவலங்கொடியோன், சேய், முதிர்கடவுள், நெடுவேள், தெய்வம், முருகு, அணங்கு, கடவுள், மலைவான், விறல்வேள், மலை உறைக் கடவுள், முருகன், சூர் செல்வன், நெடியோன், மால்மருகன்,செந்தில்,போன்றவை சுட்டப்படுகின்றன. அப்பதிவுகளாவன

"சேவலங் கொடியோன் காப்ப" (குறு-கடவுள் வாழ்த்து:5)

"நெடு வேட்கு ஏதம் உடைத்தோ"(நற்-173:4)

"மலைவான் கொண்ட சினைஇய வேலன்"(ஐங்-248:2)

"மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்"( ஐங்-259:3)

"ஒடியா விழவின், நெடியோன் குன்றத்து"(அகம்-மணி:149-16)

"வெண் தலைப் புணரி அலைக்கும் செந்தில்"(புறம் - 18)

"மான விறல் வேள் வயிரியம் எனினே" (மதுரை காஞ்சி -163)

மேற்சுட்டப்பட்ட பதிவுகள் வாயிலாகத் முருகனுக்குரிய பெயர்களாக கொள்ளப் பெற்றிருப் பதனைக் காணலாம்.மேலும் இவ்வாறு குறிப்படும் பெயர்கள்

"விசாகம் நட்சத்திரத்தில் தோன்றியதால் -விசாகன்."

"அக்கினியில் தோன்றியதால் -அக்னி புத்திரன்."

"கங்கை தன் கரங்களால் முருகனின் தீப்பிழம்பு கருவை ஏந்தியதால் -காங்கேயன்."

"சரவண பொய்கையில் மிதந்ததால் -சரவணபவன்."

"கார்த்திகை பெண்களிடம் வளர்ந்ததால்- கார்த்திகேயன்."

"அறுவரும் இணைத்து ஒருவராக மாறியதால் -கந்தன்."

"ஆறுமுகம் கொண்டதால் -ஆறுமுகன் / சண்முகன்."

"வேல் என்ற ஆயுதத்தினை உடையவன்-வேலாயுதன், சிங்கார வேலன்".

"ஆண்டியப்பன் - ஆண்டியாக நின்றவன்."

என காரணப் பெயர்களாக கொண்டு அழைக்கப்படுவதையும் காணலாம்.

## தோற்றப் பொலிவு

முருகப்பெருமான் ஒப்பற்ற ஆறு தலைகளையும், பன்னிரண்டு தோள்களையும் தன்னகத்தே ஒருங்கே தோற்றப் பொலிவு பெற்றுள்ளதைப்

"குருகொடு பெயர் பெற்ற மால் வரை உடைத்து

மூ-இரு கயந்தலை, முந் நான்கு முழவுத் தோள்"(பரி-9-11)

"அறு முகத்து ஆறு-இரு தோளால் வென்றி" (பரி-14-21)

"ஆறு இரு தோளவை; அறு முகம் விரித்தவை"( பரி-21-67)

"ஆங்குஅம் மூவிருமுகனும் முறைநவின்று ஒழுகலின்" (முருகு-குன்றம்:103)

"ஆங்குஅப் பன்னிரு கையும் பாற்படஇயற்ற" (முருகு-தகுன்றம்:118)

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

## நிறம்

இப்பெருமானின் நிறம் செந்நிறம் எனச் சுட்டப்படுவதனை

"பவழத் தன்ன மேனித் திகழொளிக்"(குறு:கடவுள்-2)

"செவ் வாய் வானம் தீண்டி"( அகம்: களிற்றியானை நிரை-120-4)

"ஞாயிற்று ஏர் நிறத் தகை" பரி: 05-12

"வேல் வல்லான் நிறனே போல் வெரு வந்த சேயும்" கலி:முல்லைக் கலி:104

"ஒண்செஞ் சீறடி"( முருகு:13)

என்னும் பாடல் வரிகள் கொண்டு அறியலாம். இருப்பினும் இக்கருத்திலிருந்து சற்று மாறுபட்டு நீல நீற மேனியுடைவன் என புறநானூறு

"ஒண் செய்யோனும்" (புறம்:56-08)

எனக் கூறுவது உற்றுநோக்கத்தக்கது.

## ஆடை

முருகப்பெருமான் அழகு மிக்க ஆடையினை அணிந்து இருந்தனை

"நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயதொருகை" (முருகு:108)

என்ற பாடல் வரிகளால் அறியலாம். இப்பெருமானின் உடை செம்மை நிறமுடையதே என

"செய்யன் சிவந்த ஆடையன்" (முருகு:206)

"உடையும் ஒலியலும் செய்யை" (பரி:செவ்வேள்19-97)

பரிபாடலும் முருகாற்றுப்படையும் கூறுவதனைக் காணலாம்.இருப்பினும் கலித்தொகை வெண்துகிலால் ஆன ஆடையினை அணிந்தது குறித்து

"வேல் வலான் உடைத் தாழ்ந்த விளங்கு வெண் துகில் ஏய்ப்ப" (கலி105:17)

கலித்தொகை எடுத்துரைப்பதனைக் காணலாம்.

## அணிகலன்கள்

ஆண்மையின் சின்னமாக கருதப்படும் விரக்கழலும் வெற்றி தொடியும் காதில் தோடும் அணிகலனாக விளங்குவதோடு மார்பினில் முத்து மாலையும் அதனிடையே புரளும் கதம்ப மாலையும் அதில் இடையே தொடுக்கப்பட்ட வள்ளிப் பூவும் சூடியுள்ளான்.மேலும் கடம்ப கண்ணியும் காந்தட் கண்ணியும் தலையினில் சூடி பல்வேறு அணிகலன்களையும் அணிந்து ஒளி கொண்டு விளங்குகின்றான். இச்செய்திகளை

"கழல்தொடிச் சேஎய் குன்றம்" (குறு:1-3)

"கடம்பும் களிறும் பாடி" (அகம்: களிற்றியானை நிரை-128-12)

"நெடு வேள் மார்பின் ஆரம் போல" (அகம்: களிற்றியானை நிரை-120-1)

"ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்" (முருகு:104)

"உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்" (முருகு:10)

"கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்" (புறம்:23-3)

"உருள் இணர்க் கடம்பின்" (கலி:93-26)

மேற்காணும் சங்கப்பாக்கள் கொண்டு அறியலாம்.

## கருவிகள்

முருகப் பெருமான் திருக்கரங்களில் இருக்கும் கருவிகளுள் தலைமயனது வேலாகும்.

என்பதனை

“மாய அவுணர் மருங்கு அறத் தபுத்த வேல்” (குறிஞ்சிப் பாட்டு :52)

“சூர் கொன்ற செவ்வேலாற் பாடி” (பரி:5-81)

“இலங்கு இலை எஃகின்” (பரி:5-7)

இச்சங்க இலக்கிய பாக்கள் எடுத்துரைக்கின்றன.அவற்றோடு அங்குசம்,கிடுகு போன்றவை உள்ளதாக முருகாற்றுப்படையும் வில்,ஈட்டி கோடாரி,மழு,கனலி போன்ற கருவிகள் உள்ளதாக பரிபாடலும் கூறுவதனை

“பொறி வரிச் சாபமும், மரனும், வாளும்,

செறி இலை ஈட்டியும், குடாரியும், கணிச்சியும்

தெறு கதிர்க் கனலியும்” (பரி:5-65-67)

என்ற பாக்கள் வயிலாக ஐயலாம்.

## ஊர்திகள்

இப்பெருமானின் ஊர்தி மயிலும் யானையுமே.இவ்யானை பிணிமுகம் எனப்படுகின்றது. இருப்பினும் மயிலே ஆறுமுகனின் முதன்மை ஊர்தி ஆகும். இது விரைந்து செல்லும் தன்மையுடையது.இக்கருத்துக்கள் சங்கப்பாக்களில் பயின்று வந்துள்ளதை

“விறல் வெய்யோன் ஊர் மயில்” (பரி:8-67)

“பிணிமுக ஊர்தி, ஒண்செய் யோனும்” (புறம்:56-8 )

என்னும் வரிகள் வாயிலாகஅறியலாம்.

## திருமணம்

முருகவேள் வள்ளியுடன் கூடியதனையும் வள்ளியை முருகக் கடவுள் மணந்த செய்தியையும்

“மை இரு நூற்று இமை உண்கண் மான் மறி தோள் மணந்த ஞான்று” (பரி:9-8)

“முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல” (நற்:82-4)

இச்சங்க பா வரிகள் எடுத்துரைக்கிறது. மேலும் தெய்வயானையை மணந்து குறித்து பரிபாடலில் குறிப்பால் மட்டுமே காணப்படுவதனை

“ஐ-இருநூற்று மெய்ந் நயனத்தவன் மகள்” (பரி:9-9)

என்னும் வரியில் காணலாம்.

## வழிபாடு

சங்ககால மக்களின் பழக்க வழக்கத்தில் வெறியாட்டு நிகழ்வும் ஒன்று. இதனை முதுமை

பெண்டிர் முன்னின்று நடத்துவர்.முருகவேளுக்கு வெறியாட்டு நிகழ்த்திய செய்தியினை

“உண்துறை அணங்கு இவள் உறைநோய் ஆயின்” (ஐங்-28)

“அணங்கும் அணங்கும் போலும் அணங்கி” (நற்-376)

“முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல” (குறுந். 362)

என்னும் சங்கப் பாடல்கள் வழி அறியலாம்.அதோடு கடம்ப மாலை,அரலை மாலை குறிஞ்சி மலர் சூட்டி திணை அரிசியுடன் ஆட்டினையும் பலியிட்டு படைத்து வழிபட்டதனை

"விரவுப் பூம் பலியொடு விரைஇ" (அகம்:232-12)

"கடம்பு கொடி யாத்து, கண்ணி சூட்டி" (அகம்:382-3)

என்னும் வரிகள் வாயிலாகஅறியலாம்.

## முடிவுரை

தமிழரின் அக வாழ்விலும், புற வாழ்விலும் முருகக் கடவுள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததை சங்க இலக்கியங்கள் நமக்கு உள்ளங்கை நெல்லிக் கனியாக எடுத்துரைப்பதனைக் காணமுடிகின்றது. தமிழ்க் கடவுள் முருக பெருமான் குறித்து சங்க சங்க இலக்கியங்கள் கூறும் கருத்துக்களோடு தமிழ் மக்களின் சமய வாழ்க்கையில் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளதையும் இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

## References

Akananoor (Kalituyanai Nirai) -Puliyur Kesigan-Gaura Publishing House-2018

Akananoor (Manimitaipavalam)-Puliyur Kesigan-Gaura Publishing House-2018

Akananoor (Nithilakovai)-Puliyurg Kesigan-Gaura Publishing House-2018

Ingurunooru Moolamum Uraiyum Puliyur Kesigan-Gaura Publishing House-2018

Kaliththokaimoolamum Uraiyum-Puliyur Kesigan-Uma Publishing House

Kurunthokai Moolamum Uraiyum Nagarasan, A. Ma Parimanam-New Century Book House-2004

Mangudi Marudanar Madurai Kanji Pathuppaattu Moolamum Uraiyum - Dr. Kathir Muruku, Saradha Publishing House.2013

Murugan In Sangha Texts -Pl Samy -Sekhar Publishing House -1990

Natrinai Moolamum Uraiyum Na Ramaiah Pillai-Varthamanan Publishing House-1999

Paribadal Moolamum Uraiyum Puliyur Kesigan- Sarada Publishing House-2009

Puranaru Moolamum Uraiyum Puliyur Kesigan-Puliurkesikan-Gaura Publishing Group-2018

Sanga Noolkalil Murugan - World Tamil Research Institute

Sangath Tamilar Vazipadum Sadangukalum - Ulakath Tamil Aarayichi Niruvanam

Sangha Literature Samaya Nokku - International Saiva Siddhanta Research Institute -1991

Thirurumurukaatrupadai Moolamum Uraiyum - Sundara Shanmuganar - Subham Printers - Chidambaram Tenfold Index Original Source And Text - Dr. Kathir Murugu, Sarada Publishing House.2012

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License